பொது சன ...
யாழ்ப்பாணம்

விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 பங்குனி 14 றஜப் 4 இதழ் 45
யாழ்ப்பாணம் புதன்கிழமை 27-3 1985

# இலங்கைத் தலைவர்களின் மனப்போக்கை அறிவதே பண்டாரிவிஜயத்தின்நோக்கம்

## அரசியல் அவதானிகள் கருத்து

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியா தன் நற்பணிகளைக் கொடுத்துதவ முன்வந்திருப்பதை இலங்கைத் தலைலர்கள் உண்மையாகவே பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார்களா எனபதை அனுமானித்துக் கொள்வதே இந்திய வெளியுறவுசெயலாளர் திரு ரமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயத்தின் முக்கிய நோக்கம் என புதுடில்லி அரசியல் வடடாரங்களில் கருதப்படுகின்றது.

இலங்கைத் தலைவர்களிடம் மனமாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது என்றவகையில் எதுவித முடிவுக்கும் வருவதற்கு இந்திய அரசியல் அவதானிகள் தயக்கம் காட்டுகிறார்கள் இருந்தபோதிலும் இலங்கையில் இடம்பெற்றுவந்த வன்செயல்களின் தீவிரத்தன்மை குறைந்திருப்பது அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்

[5ம் பக்கம் பார்க்க]

# தட்சர் விஜயத்தின் பின்னர்--

# ஜே. ஆர். - ரஜீவ் சந்திப்பு நிகழும்!

## தொண்டமான் நம்பிக்கை

[பெஞ்சமின் ராஜரட்ணம்]

**பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் இலங்கைக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்தையடுதது இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான இலங்கை - இந்திய உயர்மட்ட மாநாடு ஒன்று இடம்பெறக்கூடும் என்று கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.**

இலங்கை வந்துள்ள இந்திய வெளிஉறவுச் செயலாளர் திரு. ரமேஷ் பண்டாரி திரு. தொண்டமானைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து திரு. தொண்டமானுடன் 'ஈழநாடு' தொடர்பு கொண்டபொழுது அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்

எத்தனையோ தடவைகள் எத்தனையோ தரப்பினர் இதுவரை இப்பிரச்னை பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டார்கள், ஆனல் எதுவித பயனும் ஏற்படவில்லை. ஆனல் இலங்கை-இந்திய தலைவர்கள் சந்தித்து விவாதிப்பதின் மூலமே இதற்கு ஒரு தீர்வினைக் காணமுடியும் என்று திரு. தொண்டமான் சொன்னர்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்தனவும் இந்தியப் பிரதமர் திரு ரஜீவ்காந்தியும் விரைவில் சந்தித்துப்பேச வேண்டும் என்ற கருத்தைக் தாம் திரு. பண்டாரியிடம் வற்புறுத்தியதாகவும், அவர் அதையேற்றுக்கொண்டு திரு. காந்தியிடம் தெரிவிப்பதாகக் கூறியதாகவும் திரு. தொண்டமான் சொன்னர்.

இனப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கான ஒரு சந்தர்ப்பம் இப்பொழுது உருவாகியுள்ளது இதுவேஒரு திருப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

## ஜனதிபதிக்கு ரஜீவிடமிருந்து வந்த கடிதம்

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு ஜனதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவைக் கேட்டுக்கொள்ளும் கடிதம் ஒன்றை இந்திய பிரதம மந்திரி திரு ரஜீவ்காந்தி அனுப்பி இருக்கிறார்கள்,

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரமேஷ் பண்டாரி மூலம் அனுப்பப்பட்டுள்ள மேற்படி கடிதம், இலங்கையிலுள்ள தமிழ்மக்கள் சட்டபூர்வமான தம் உரிமைகளை அனுபவிக்கும் விதத்தில் அரசியல் தீர்வொன்றைக் காணும்படி இலங்கை ஜனதிபதியை வற்புறுத்தியுள்ளார்.

## அமிருக்காக ஆராதனை

[யாழ்ப்பாணம்]

கூட்டணித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சுகமடைய கோரி வண்ணை வெங்கடேஸ்வர பெருமாள் கோவிலில் இம்மாதம் 29-ம் திகதி விசேட அபிஷேக ஆராதனை நடைபெற இருக்கிறது. (மா)

## தந்தை செல்வா--- ஸ்தூபியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவு தினத்தையொட்டி இம்மாதம் 31ம் திகதி காலை. யாழ். நகரிலுள்ள தந்தை செல்வாநினைவு ஸ்தூபியில் அஞ்சலி இடம்பெறும்.

நல்லூர். இந்து விடுதியில் அன்று தந்தைசெல்வா நினைவு தினககூட்டம் நடைபெறும்.

{மா}

## ரூபா 30,000 எரிபொருள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள லக்ஸ் சிவா சேல்ஸ் பேர்சசஸ் எரிபொருள்நிலையத்தில் சுமார் 30,000 ரூபாபெறுமதியான, பெற்ரோல், ஓயில் ரம் மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன

இம்மாதம் 20ம் தேதி இரவு இக்கொள்ளை நடந்துள்ளது.

728 லிட்டர் பெற்ரோல், 11 லிட்டர் பிறேக் ஓயில், ரியூப், மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட வியாபாரியான இவர், இது பற்றி பொலிசில் புகார் செய்துள்ளார் (க)

## இவர்களுக்கு— மறு அறிவித்தல் வரை ஓய்வூதியம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தபால் அலுவலகங்கள்மூலம் ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுககு மறு அறிவித்தல்வரை ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்று அறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியில் பணம் இல்லாததால் ஓய்வூதியம் வழங்க முடியவில்லையென்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குருநகரிலுள்ள மக்கள் வங்கிப் பிரிவில அண்மைக் காலமாக ஓய்வூதியம் வழங்கப்

(5-ம் பக்கம் பார்க்க

## இந்திய கடலாதிக்கப் பகுதியில்—— —— காவல் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது

### லோகசபையில். தகவல்

(புதுடில்லி)

இலங்கைக் கடற்படையினர் பாக்- ஜலசந்திப்பகுதியில் ஊடுருவுவதையடுத்து இந்தியக்கடலாதிக்கப் பகுதியில் இந்திய கடற்படை, காவற்படையினரின் கண்காணிப்புப் பணிதீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பமைச்சர் வி பி. நரசிம்மராவ் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் லோக்சபாவில் தெரிவித்தார். விமானம் ஒன்றும் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இலங்கைக் கடற்படைக்கப்பல்களின் ஊடுருவல்குறித்து ராஜாங்க முறைப்படி இலங்கை அரசிடம் கடுமையான ஆட்சேபம் தெரிவிக்கப் பட்டுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

(ப)

## தனியார் பஸ்சேவை இன்று ஸ்தம்பிக்கும்!

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் தனியார் வாகனங்கள் கடத்தப்படுவதை எதிர்த்து இன்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் தனியார் பேருந்து சேவையினர் ஈடுபட விருப்பதாக நேற்று வெளியிடப்பட்ட ஒரு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''அண்மைக் காலங்களில் போக்குவரத்து சேவை பல காரணங்களால் சீர்குலைக்கப் பட்டுவருகின்றது, அரசின் கெடுபிடி நடவடிக்கைகளையும் மீறி பொதுசன போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் எம்மவரை: வாகனக் கடத்தல்களும் ஆயுதமேந்தியோரின் அடாவாடித் தனங்களும் வெகுவாகப் பாதிக்கின்றன.

புனிதமான விடுதலைப் போராட்டத்தின் பெயரால் இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றச் செய்வதனை தடுப்பதோடு கசப்புணர்வும் கொள்ள வைக்கும் ஆபத்தான நிலை

[5-ம் பக்கம் பார்க்க]

## ஆரம்ப நீதிமன்றங்கள்

(சுன்னகம்)

சங்கானை, மயிலிட்டி, மல்லாகம் ஆகிய ஆரம்பநீதிமன்றங்கள் எதுவிததடங்கலுமின்றி நடைபெறுகின்றன.

## திருநெல்வேலியில் நேற்று நடந்த உண்ணவிரதம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்கள் சிலர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதை எதிர்த்தும் அவர்களை விடுவிக்குமாறு கோரியும் திருநெல்வேலியிலுள்ள அம்மன்கோயில் முன்றலில் நேற்று உண்ணவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது அதிகமான பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை 7 மணிக்கு உண்ணவிரதம் ஆரம்பமானது உண்ணவிரதம் இருந்தவர்கள் மததியில் பல சுலோக அட்டைகளும் காணப்பட்டன.

''மக்கள் விடுதலைப்புரட்சி தமிழீழத்திலேயே அன்றி தமிழ் நாட்டில் அல்ல''.

(5ம் பக்கம் பார்க்க)

## மின்கம்பத்தில் கட்டப்பட்ட மூவரும்— திருட்டுக் குற்றத்துக்காக சிறைதண்டனை பெற்றவர்கள்!

### மரணவிசாரணையில் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தமூவரும், திருட்டுக்குற்றத்திற்காக சிறைத்தண்டனை பெற்றவர்கள் என்று நேற்று நடந்த மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மூன்று மரணவிசாரணைகளையும், யாழ். உத்தியோகப்பற்றற்ற நீதவான் ஏ. அன்ரனி நடத்தினர். சார்ஜன்ட் வி. எட்வேட் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

பரஞ்சோதி கமலக்கண்ணனின் (18 வயது) சடலத்தை அவரது தாயார் பரஞ்சோதி தீபநாயகி அடையாளம் காட்டினர்.

தாயார் சாட்சியமளிக்கையில்; தான் கணவனைப் பிரிந்து தனியாக வசித்து வருவதாக

(6ம் பக்கம் பார்க்க)

# அசிளம்பரம்

## விற்பனைக்கு

முதல்தரமான விஜிதா நம் 1 நாட்டரிசி கல்லில்லா மல் கைதேர்ந்த தொழிலா ளர்களினால் கல் அரித்து தயா ரிக்கப்படுபவை வர்த்தகர்கள் விரும்பி விற்பனை செய்வதும் பாவனையாளர்கள் கேட்டு வேண்டுவதும் விஜிதா நம் 1 நாட்டரிசி. தயாரிப்பாளர் களும் விநியோகஸ்தர்களும்; விஜிதா அரிசி ஆலை, தாவடி தெற்கு, கொக்குவில். 1909

சுண்டிக்குளி, கச்சேரி - நல் லூர் வீதியில் இரண்டு பரப் புக் காணியுடன் வீடு விற் பனைக்குண்டு. விபரங்களுக்கு: பவளா நந்தகுமாரன், சட் டத்தரணி, 45, கச்சேரி-நல் லூர் வீதி, சுண்டிக்குளி. 2464

Video Camera, Hitachi V.K C 800 விற்பனைக்குண்டு. 45, பழம் ரோட், கந்தர்மடம். தொலைபேசி: 23759. (2473)

T. V. 20'' கலர் Philips விற்பனைக்குண்டு. 14'' கலர் T. V. யுடன் மாற்ற சம்மதம் விபரங்கட்கு சாயி ரெலி ரேப், அச்சுவேலி. தொலைபேசி: 23759. (2472)

நல்ல நிலையிலுள்ள வீட்டுப் பாவனைப் பொருட்களும், மின் சாரக் கருவிகளும் உடன் விற் பனைக்குண்டு. தொடர்பு; 149, கோவில் வீதி, நல்லூர். 2477

35 அடி உயரமுள்ள Pipe அன்ரனாவும், அதனுடன் சம் பந்தப்பட்ட Boosterரும் விற் பனைக்குண்டு. தொடர்பு:பாக் கியநாதன், 4, அருளம்பலம் லேன், அரியாலை, யாழ்ப் பாணம். 2489

மானிப்பாய் ரோட்டில் பழைய C. T. B. டிப்போ அருகில் உள்ள 5 1/4, பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற் பனைக்குண்டு. தொடர்பு கொள்க: நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ், 797, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2494

உங்கள் கோழிகளுக்குரிய தீனிவகை, மீன்தூள் எது வானாலும் யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ள அண்ணா இன்டஸ்றீஸ் (கிளை) யும்மா மொஸ்க் லேன், யாழ்ப் பாணம். 2479

N V 390 வீடியோ டெக் கும், Sony 20'' கலர் T. V. யும், வீடியோ கசட்டுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. G. வில்லியம், அலுக்கைச் சந்தி, அளவெட்டி வடக்கு, அள வெட்டி. 2493

கள்ளப்பிட்டி, கண்டா வளை, மடுக்கரை வீதியில் 10 ஏக்கர் வயல் விற்பனைக் குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: க. தியாக ராசா, "மதி வாசம்", புலோலி தெற்கு, புலோலி. 249/

பாவித்த அவியல் தாங்கி விற்பனைக்குண்டு. 8' x 4' நேரில் பார்த்து மதிப் பைத்தரவும். ஆகக்கூடிய மதிப் பாளர்களுக்கே பொருள் வழங்கப்படும். திருமகள் அரிசி ஆலை, சி. என். கே. மில்ஸ், யாழ்ப்பாணம். 2432

## விற்பனைக்கு

கோண்டாவில் இருபாலைச் சந்தி ரோட்டு முகப்பில் இராச வீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி உடன் விற் பனைக்குண்டு. தொடர்பு: ப. பாலசுப்பிரமணியம் கடை, ஞானவைரவர் வீதி, உரும் பராய் கிழக்கு, உரும்பராய். 2501

## தேவை

சேவிஸ் ஸ்ரேசனில் 10 வரு டங்களுக்குமேல் வேலைசெய்து அனுபவம் உள்ள வேலையாட் கள் உடன் தேவை. அண்மை யில் உள்ளவர்கள் விரும்பத் தக்கது. உடன் நேரில் வரவும். லக்கி லுபிறிகேஷன், காங் கேசன்துறை வீதி, மல்லாகம். (2474)

## வாடகைக்கு

யாழ். இந்து, இந்து மகளிர் கல்லூரிகளுக்குமிடையில் 70/10, அரசடி ஒழுங்கையில் தொலைபேசி உட்பட சகல வசதிகளுமுள்ள ஆறு அறை கள் அடங்கிய புதிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. 2498

## தவறிவிட்டது

மங்களேஸ்வரி சிவகுரு என் பவரின் தேசிய அடையாள அட்டை இல. 625372560 V தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் கலியுகச் சந்தி, துன் னாலை தெற்கு, கரவெட்டி என்ற விலாசத்தில் ஒப்படைக் கவும். சன்மானம் வழங்கப் படும். N. P. பொன்னுத் துரை 2495

Jase (Trimmer Hall Classes) 202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம் (டில்கா மேல் மாடி), B. A., G. A. Q. வகுப்புக் கள் 30-3-85-ல் ஆரம்பம். விபரங்கள் 23-3-85 முதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். C.E.I. வகுப் புக்கள் பற்றிய விபரம் விரை வில் அறிவிக்கப்படும். 2399

திருமண வைபவங்கள் மற்றும் விழாக்கள்
முதலியவற்றை
வீடியோ படம் பிடிக்கவும்
வெளிநாட்டிலிருக்கும் உங்கள் உறவினர்களுக்கு
அனுப்பவும்
தொடர்பு கொள்ளுங்கள்.

**ஸ்பெக்ரம் வீடியோ சென்ரர்**
**SPECTRUM VIDEO CENTRE**

கே. கே. எஸ். ரோட், வல்வெட்டித்துறை.

Prop: N. SRI RAM — Branch:
ESTD: 1980 — BAMBALAPITIYA.

(2482)

# ஹோம் பிறுன்ஸ் லிமிட்டட்

## பஸ் சேவை
## மீண்டும் ஆரம்பம்

கொழும்பு — யாழ்ப்பாணம் — கொழும்பு

**கொழும்பிலிருந்து புறப்படும் நேரம்:**
இரவு 10-00 மணி

**யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்**
நேரம்: காலை 8-00 மணி

**கட்டணம் ரூபா 100-00**

ரிக்கற் பெற்றுக்கொள்ளுமிடங்கள்.

ஹோம்பிறுன்ஸ் லிமிட்டட்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

நியூலங்கா அலுமினியம் இன்டஸ்ரீஸ்
6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 23596

அன்னராஜா ஸ்ரோர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22608

நியூ பிரசீதா
337 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 22480

## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி கனகரத்தினம் நல்லம்மா**
மாண்புமிகும்
எமது இல்லாள்

தோற்றம்: 14-1-1918
மறைவு: 27-3-1984

ஆண்டு வரும் பிங்கள வருடமதில் அவதரித்த
அன்னையவள் பங்குனித் திங்களதில் - மாண்டதனால்
ஆறாது அழுது தினம் ஏங்குகின்றோம் யாம் எல்லாம்
அன்னையை எண்ணித் தினம்.

அறுபதொடாறு வயதான போதினிலே
அமரபதி எய்திய எமதில்லாள் — நல்லம்(மா)
அல்லும் பகலும் எம்மையெல்லாம் காத்தனளே
அன்னைக்கு யார் நிகரோ இங்கு.


எங்கள் அம்மா நல்லம்மா எம்மகத்தில் வந்தவுடன்
நன்றும் தீதும் நலமுடனே சீர்பெற்று - எமதல்லம்
எக்குறையும் நீங்கி இனிதே நிறைவெய்தி
நன்றெனவே இருந்தேம் யாம்.

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசத் தின் இருப்பிடமாய், குடும்பத்தின் ஒளி விளக்காய், இருந்த எமது இனியதாயே! தங்களை எங்கள் அனைவருக் கும் நிழல்தரும் ஆலமரம் என எண்ணி இருந்தோம். நிலையான நிழல்தேடி, இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். இறையடியில் நீங்கள் ஏந்தும் தீபம்போல் எம்மனதில் என்றும் அணையாததீபமாக, நீங்கள் பிரகாசித்துக்கொண் டிருப்பீர்கள் இன்று உங்களின் மறைந்த, ஓராண்டு முடிபை நினைவு கூர்ந்து, உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மறவாத
**கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்.**

இல: 12/2, சந்தான மாதா கோயில் வீதி,
பாண்டியதாழ்வு, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 27-3-1985. 2490

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



**திரு. பொன்னையா முத்துத்தம்பி**

கண்ணினை இமைகாத்தல் போல
காத்தனை எம்மை என்றும்
பண்பினால் ஈகை தன்னால்
பாரிடை உயர்ந்தோய் நீயே
எண்ணரும் குணத்து முத்துத்
தம்பி என்றுலகு போற்ற
விண்ணகம் சென்றாயேனும்
விளங்குவாய் நம் அகத்தே.

வேலணை மேற்கு திரு. பொன்னையா முத்துத்தம்பி அவர்கள் 28-2-85ல் மறைந்தபோது அன்னாரது இறுதிச் சடங்குகளில் நேரில் பங்கு கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் சகல வகையிலும் உத வியும் எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் தெரி வித்த அனைவருக்கும் எமது உளம்நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 27-ஆந் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு வேணுக்குளக் கரையில் நடைபெறும், அந்தியேட்டிக் கிரியையிலும் காலை 9 மணிக்கு அவ ரது இல்லத்தில் நடைபெறும் பாஷாண பூசையிலும் நாளை வியாழக்கிழமை பகல் 10 மணிக்கு இல்லத் தில் நடைபெறும் சபிண்டீகரண வைபவத்திலும் கல ந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த் திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள்.**

வேலணை மேற்கு. 2499

**மணிவாக்கு**

அடிபணிந்து முழந்தாளிட்டு வாழ்வதிலும் பார்க்க தன்காலில் நின்று மடிவது நன்று.

— பிராங் டி ரூஸ்வெல்ட்

# நமதுநோக்கு

## 'நோய்நாடி... வாய்ப்பச் செயல்'

நாட்டில் பொதுவாகவும் யாழ்ப்பாணத்தில் சிறப்பாகவும் இரு அற்புதங்கள் ஆரம்பமாகின்றன.

பருவக் காற்று வரமுன்னரே பட்டங்கள் பறக்கத் தொடங்குகின்றன. மாரி மழையில்லாமலே மாரி மன்னன் காதைத் துளைக்கிறுன்.

இவ்வித அதிசயங்கள் நாம் எதிர்பாராததல்ல.

நாடு நோய்வாய்ப்பட்டிருக்கிறது. நாட்டின் மூலப் பகுதிகளில் ஒன்ருன வடக்கு நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

சடுதியாக வந்த நோய் அல்ல இது; முன்னர் வைத்தியம் காணுத நோயுமல்ல. பலவிதமான வைத்தியம் உருப்படியான பலனளிக்கவில்லை.

வடக்கின்நிலைவரம் ஆபத்தானதென்ருல், தெற்கு சுகம் பலம் பெற்று வாழ்கிறது என்று கொள்வது சரியல்ல. நாட்டைக் குணப்படுத்தும் வைத்தியம், வடக்கையும் குணப்படுத்தும். இன்றைய அரசியல் வைத்தியர் இதனை உணரவில்லை.

இந்த நிலையில் தொடரும் வைத்தியம் நிலைமையை மோசமாக்குவதுடன் வேருெரு நோயையும் வரவழைக்கவல்லது.

எந்தவித வைத்தியத்திலும், நோய் நாடியால் அறியவேண்டியது.

ஒரு நல்ல வைத்தியன், எத்தனை ஆற்றல் நிறைந்த அனுபவம் மிசக வைத்திய நிபுணரை நாடி நோய் நாடும் கலையைப் பயில்கின்ருன்.

எனவே இத்துறையில் எவ்வித பயிற்சியுமில்லாது நானொரு வைத்தியன்; நானும் தலைவன் என்றித் தொழிலில் பலர் இறங்குகின்றனர். சில காலம் உறங்கிக் கிடந்தனர். இன்று நாம் மேலே குறிப்பிட்ட பட்டம்போல், மாரி மன்னன்போல மருந்துரைக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

நாம் குறிப்பிடும் நோய் ஒரு நாட்டை, ஒரு இனத்தைப் பீடித்திருக்கும் நோய்.

தமிழ் மக்கள் தினசரி அழிவுக்கு உள்ளாவதானல், அதற்கு நாம் எவ்வாறு உதவினேம், இந்த அழிவில் எமது பங்கு என்ன என்று ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையும் சிந்திக்கவேண்டும்.

நாமொரு நாகரிகமான மக்கட் கூட்டம் என்ருல் எமது பொதுப்பண்புகள் என்ன? அவை எவ்வாறு இன்றைய நிலைக்கு ஈடு கொடுக்கமுடியாதுபோய் விட்டன?

சுயசிந்தனையில் எங்கள் குறைகள் என்ன என்பதையும் ஆராய்ந்து அவற்றை ஒழிக்க இந்த நெருக்கடி நிர்ப்பந்திக்கிறது.

நெடுங்காலமாக குறிப்பாக பிரிட்டிஷ் ஆட்சியில் எங்கள் தனிப்பட்ட நலத்தைக் கவனித்துவந்த பிறவிகள் நாம் என்பதை மறந்துவிடக்கூடாது.

பெரும் தலைவர்கள், புலவர்கள், திறமைசாலிகள் எங்கள் மத்தியில் என்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்; இருப்பினும் எங்கள் குடும்பத்தின், குலத்தின், குழுவின் உயர்ச்சிக்கே எங்கள் கல்வி தொழில் திறமை யாவும் அர்ப்பணிக்கப்பட்டவை.

சமுதாய உணர்வு உறங்கிக்கிடந்ததை, நாம் ஒப்புக்கொள்வோமாஞல் அது மீண்டும் நித்திரைக்குப் போவதை அனுமதிக்க மாட்டோம்.

இந்தக் கொடிய மழையிலும், சூருவளியிலும் எவ்வாறு நாம் தப்பலாம், எங்கள் பிள்ளைகளை எவ்வாறு பாதுகாப்பாக வெளி நாட்டுக்கு அனுப்பலாம், ஆங்கிலத்தில் கல்வி கற்று உலகில் எங்கிலும் உத்தியோகம் பார்க்கும் அவா எமக்கு இயற்கை யாவதற்கு நாம் ஒரு சமுதாயம் என்ற உணர்வின்மையே முக்கிய காரணமாகும்.

இன்று எமது மக்களின் நிலை மாற வேண்டிய கட்டம் வந்து விட்டது சமுத்திரத்தில் அரை வழிக்கு மேல் பிரயாணம் முடிந்த போதும் அன்று கொலம்பஸ் என்ற பெரு மகனின் தலைமையில் அமெரிக்கா சென்ற மாலுமிகள் பலர் அவரை நடுவழியில் தடுக்க முற்பட்டனராம் அவர் அதற்கிணங்கியிருந்தால் இன்றைய வரலாறு எவ்வாறிருக்குப்?

என்றுமில்லாதவாறு இன்று நடைபெறும் எமது சுதந்திரப்பயணம் பிசுபிசுத்துப் போவதற்கு உள்ளுக்கும் வெளியிலும் பகைமை உண்டு.

அரச வஞ்சனையால் மக்கள் சுயநலத்தால் இது தடைப்பட்டால் நோயிலும் பார்க்க மருந்து மோசமான நிலை ஏற்படுத்தும்.

எம்மைப் பீடித்திருக்கும் நோய்க்கு எமக்கு ஒத்துவரும் மருந்தே தேவை; எவ்வித அலெர்ஜியையும் இனிமேல் அனுமதியோமென்று ஒற்றுமைப்பட்ட ஒரே குரல் எழுப்புவோமாஞல் அது நோய்நீங்கும் அறிகுறியாகும்.

## குற்றச்சாட்டுகள் தவருனவை

(யாழ்ப்பாணம்)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் விசேட சேவை அலுவலர் திரு வே. த. கதிர்காமநாதன் என்பவருக்கு எதிராக இயக்கங்களின் கவனத்துக்கு என்றுஒட்டப்பட்டிருந்தசுவரொட்டியில் தெரிவிக்கப்பட்ட சில குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவருனவை என்றும் அந்தஅலுவலர் மக்களுக்காக திறமையாகச் சேவையாற்றியவர் என்றும் வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி பிரஜைகள் குழு அண்மையில் நடாத்திய பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பாராளுமன்றத்திலிருந்து — நமது சபைநிருபர்

# மாணவர் எதிர்காலம் சரத் கவலை

பல்கலைக்கழகதிருத்தச்சட்டத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு வராத வண்ணம் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக கடந்த இரண்டு மூன்று வாரங்களில் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு பெரிதும் குறைந்திருக்கிறது. சில பகுதிகளிலுள்ள மகாவித்தியாலயங்கள் இதனுல் மூடப்பட்டும் இருக்கின்றன.

வகுப்புகளுக்கு வராத வண்ணம் தடைசெய்யப்பட்டிருக்கும் மாணவர்கள் பலர் கல்விப் பொதுத் தராதர வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். இந்த மாணவர்களுக்கு எதிராக இவ்விதம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் அவர்களுடைய எதிர்காலக் கல்வி மிகவும் பாதிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. கடந்த 21ம் திகதி பாராளுமன்த்தில் ஒலித்த கம்யூனிஸ்ட் சரத்தின் ஆழ்ந்த கவலை இது.

குறிப்பிட்ட மாணவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் இந்தத் தடை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நீக்கப்பட வேண்டும். அத்துடன் மூடியிருக்கும் மகாவித்தியாலயங்களும் மீண்டும் திறக்கப்படவும்வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கலவானைத் தொகுதி அங்கத்வர் கூறியதைப்போல் மகா வித்தியாலயங்கள் எதுவும் மூடப்படவில்லை, இன்று நாடு முழுவதும் 2,000 மகாவித்தியாலயங்கள் இருக்கின்றன என கல்வி அமைச்சர் தமது பதிலுரையில் கூறியபோது, குறுக்கிட்ட சரத், கட்டுப்பத்த பல்கலைக்கழகம் உட்பட நிக்கவரெட்டிய, மொனருகல, மாத்தறை, கம்பஹா, குருநாகல் போன்ற மாவட்டங்களில் பல மகாவித்தியாலயங்கள் மூடப்பட்டிருக்கின்றன என்ருர்.

அடுத்து ஒரு சஞ்சிகையின் போட்டோ ஸ்ரட் பிரதியைக் காட்டிய சரத், கல்விஅமைச்சர் ஜனுதிபதியாகப் போகிருர் என்று இந்த சஞ்சிகை தெரிவிக்கிறது என்றதும்-

அமைச்சர் ரணில், அந்த சஞ்சிகையில் பல விடயங்கள் தவருக வெளியிடப்பட்டிருக்கின்றன. 'இந்தியா ருடே' என்ற அந்தசஞ்சிகையில்வெளி வந்திருக்கும் குறிப்பிட்ட சட்டுரையில் நான் திருமணம் ஆனவன் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அது எப்படி இருக்கமுடியும்? என்று வினவினுர்.

[5-ம் பக்கம் பார்க்க]

# சிறில்மத்யூ, வாசு மீது நடவடிக்கை அமிர், தொண்டா மீது இல்லையா?

"எமது நாட்டின் மீது ஆக்கிரமிப்பு நடத்த வேண்டும் என்று இந்தியாவிடம் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுக்கிருர்; 'அமிர்' எமது நாட்டை இரண்டாகப் பிரிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருக்கிருர் அவர் மேலும் மேலும் அதிக ஆயுதங்களை ஏந்தி அரசுக்கு எதிராக மேலும் தீவிரமாகப் போராடி அரசாங்கத்தை அழியுங்கள் என தீவிரவாதிகளுக்கு அழைப்பு விடும் பாணியில் அறிக்கைகளை விடுத்துள்ளார். அமைச்சர் தொண்டமான். இவ்வாறு துரோகச் செயலில் ஈடுபடும் அமிருக்கோ தொண்டமானுக்கோ எதிராக எதுவித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனல் தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மக்கள் விடுதலை முன்னணிக்கும் மாணவர் ஆர்ப்பாட்டத்தின் போது அவ்விடத்தில் காணப்பட்டதாகக் கூறப்படும் வாசுதேவாவுக்கும் மற்றும் சிறில் மத்யூவுக்கும் எதிராக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது என்ன நியாயம்?"

கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தின் எதிர்தரப்பிலிருந்தே இவ்வாருன நியாயக் கோரிக்கை எழுந்தது.

23-வது தடவையாக சபைக்கு வந்த அவசரகால நிலை நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் 22 தடவைகளையும் விட சற்று காரசாரமாக இருந்தது. யுத்தம், பயங்கரவாதம், தொண்டமான், அமிர், தீவிரவாதிகள் இந்தியா ஆகியவையே இவ் விவாதத்தின் கருப்பொருடகளாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

சபை கூடியதும் கம்யூனிஸ்ட் சரத்தின் கேள்விக்கு பிரதி வெளிநாட்டமைச்சர் பதில் அளிக்கையில் அங்கே ஒரு சிறு குட்டி வாதம் —

டிரோன்பெர்ணண்டோ: 84 மே முதல் 85 பெப்ரவரி 28 வரை விசா பெற்றும் பெருமலும் 78 இஸ்ரேலியர்கள் இங்கு வந்துள்ளனர். அமெரிக்க தூதுவராலயத்தினூடாகவும் பலர் வந்துள்ளனர். 25 பேர் உல்லாசப் பிரயாணிகள் விசாவுடன் வந்தனர். புலஞய்வுத்துறையினருக்கு பயிற்சி அளிக்க இருவர் வந்தனர் எவருமே ராஜதந்திர விசாவில் வரவில்லை.

லக்ஷ்மன்: நலன்காக்கும் பிரிவில் பணிபுரிபவர்கள் எப்படி வந்தார்கள்.

பிரதிஅமைச்சர்: அவர்கள் அமெரிக்க தூதுவராலயத்தினூடாக வந்தனர்.

சரத்: அப்படியானுலும் விசா இல்லாமலும் இஸ்ரேலியர்கள் இங்கு வந்துள்ளனர்.

பிரதிஅமைச்சர்: தூதுவராயயத்தினூடாக வருபவர்களுக்கு விசா தேவையில்லை.

லக்ஷ்மன்; இப்படி எத்தனை பேர் வந்தனர்.

பிரதிஅமைச்சர்: அதுபற்றி எனக்குத் தெரியாது

லக்ஷ்மன்; வேறு நாட்டவர்களும் இப்படி வந்துள்ளார்களா?

பிரதிஅமைச்சர்: 3 உப கேள்விகளுக்கு மேல் கேட்டுவிட்டீர்கள்.

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் வின்சன்ட்பெரேரா தமது மாதாந்த அறிக்கையைச் சமர்ப்பித்ததும் எழுந்த மதவாச்சி உறுப்பினர் தமது உரையில் மதவாச்சி பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவம் குறித்தே அதிக கவனம் செலுத்தினுர்.

பாதுகாப்புக்காக இன்று ஏழு அமைச்சர்கள் இருந்தபோதிலும் இனப்பிரச்னையும் பயங்கரவாதமும் தீர்ந்தபாடாக இல்லை என்பதே அவரது முக்கிய வாதம்.

மக்கள் தம்மைப் பாதுகாக்க அரசாங்கம் ஆயுதங்கள் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த மைத்திரி மேலே தொடர்கிருர்—

தீவிரவாதிகள் மதவாச்சி, அனுராதபுரம் வரை வந்துவிட்டனர் மன்னுர் ஊடாக வந்தவர்களே மதவாச்சி பொலிஸ் நிலையத்தைத் தாக்கியிருக்கிருர்கள். எண்ணிக்கையில் குறைவாக இருந்தபோதிலும், எமது பொலிசார் தீரமுடன் போராடி தீவிரவாதிகளை விரட்டி விட்டார்கள். ஓடும்போதே ரயில் நிலையத்தையும் தாக்கியிருக்கிருர்கள்"

பாதுகாப்புக்கென 6 அமைச்சர்கள் இருந்தபோதிலும் பாதுகாப்பு சம்பந்தமான விவாதம் இடம்பெறும்போது ஒருவராவது சபையில் இருக்கக்கூடாதா என்ற கேள்வியுடன் பேச்சை ஆரம்பித்த அத்தனகலை உறுப்பினர்—

இன்று நடைபெறும் போருக்கு நாளாந்தம் தற்போது ஒரு கோடி ரூபா செலவிடப்படுகிறது என்றும் எதிர்காலத்தில் மணி ஒன்றுக்கு 10 லட்சம் செலவிடவேண்டி ஏற்படும் எனத்தாம் அறியவந்துள்

[5ம் பக்கம் பார்க்க]

## தவக்காலத்தின்



## 36-ம் நாள்

'அவர்கள் கண்கள் காணுமலும், உள்ளத்தால் உணராமலும், மனந்திரும்பாமல் இருக்கவும், நானும் அவர்களைக் குணமாக்காதிருக்கவும், அவர்களுடைய கண்களைக் குருடாக்கி, உள்ளத்தை மழுங்கச் செய்தார்' என்றும் இசையாஸ் கூறியுள்ளார் அன்ரே?

—அரு. 12 : 40

கண்களிருந்தும் குருடாக, காதுகளிருந்தும் செவிடராக, வாயிருந்தும் ஊமையராக, உள்ளமிருந்தும் மரக்கட்டைகளாக வாழ்ந்து வருகின்ரேம். எமது உணர்வுகள் மரத்துப்போன நிலையில் பிறரது தேவைகளை, உள்ளத்துக்கிடக்கைகளை புரியாது, உணராது செயற்பட்டு வருகின்ரேம் இந்நிலை மாறவேண்டுமாகில் நாம் மற்றவர்களை மையயாக வைத்து சிந்திக்கப் பழகவேண்டும். எமது சிந்தனைகளும் செயற்பாடுகளும் பிறர்மீது நாம் கொண்டுள்ள கரிசனையை, அவர்கள்மீது நாம் காட்டும் அக்கறையினை வெளிப்படுத்துவதாய் அமைதல் வேண்டும்.

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமிகோவில் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதனையொட்டி காலை தசதர்சனம், ஜெமான அபிஷேகம், ஆசியுரை, மகாபிஷேகம் விசேட பூசை இடம்பெறவுள்ளன.

மாலை வள்ளி, தெய்வயானை சமேத கதிர்காமப் பெருமான் திருவீதி உலாக் காட்சி இடம் பெறவுள்ளன.

### வளைகுடாயுத்தம் மோசமடைகிறது

# ஈராக் அதிபர் சதாம்ஹுசைன் இல்லம் அருகிலும் ஏவுகணைவெடி!

பக்தாத், மார்ச் 26

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் வாசஸ்தலம் அருகே ஏவுகணையொன்று வெடிக்குமளவுக்கு வளைகுடா யுத்தம் மோசமடைந்து வருகிறது. ஈரானியத் துருப்புகள் ஈராக் தலைநகரான பாக்தாத் மீது நேற்றுதாக்குதலை மேற்கொண்டது. இதில் எட்டுப்பேர் பலியானார்களென்றும் கூறப்பட்டது.

இத்தாக்குதலின் போதே அதிபர் சதாம் ஹுசைனின் உத்தியோக பூர்வவாசஸ்தலம் அருகே ஏவுகணை யொன்றும் வெடித்தது.

ரைகிறிஸ் நதிப்பகுதியில் ஈரானுக்குப் பலத்த சேதத்தை உண்டுபண்ணியுள்ளதாகவும், இஸ்வஹான் என்ற ஈரானிய நகர் மீதான தாக்குதலில் இருவர் பலியானதாகவும், 30 பேர்காயமடைந்ததாகவும் ஈராக் கூறியது.

ஈரானிய தரப்பில், நான்கு ஈராக்கிய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனல் ஈராக் இதனை மறுத்துள்ளது. இதேவேளை யுத்தமுனைகளில் மரணிக்கும் ஈரானிய வீரர்களின் சடலங்கள் பெரும் ஆக்ரோசமான ஊர்வலங்களுடன் ஈரானிய நகரங்கள் வழியாக புதைகுழிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இது ஒரு அன்றட நிகழ்ச்சியாக ஈரானில் இடம் பெறுகின்றது. இத்துடன் இராணுவசேவைக்கும் பெருமளவில் இளைஞர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். (கி)

## லண்டன் பரீட்சையில் சித்திபெற்ற ஒரே மாணவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த செல்வி சித்திரா சேனுதிராசா லண்டன்ஐ. டி. பி. எம். பரீட்சையின் நான்கு பிரிவிலும் சித்தியடைந்துள்ளார். யாழ். நகரில் 84 டிசம்பரில் நடந்த இறுதி பரீட்சையில், தோற்றி சித்தியடைந்த ஒரே மாணவி இவராகும். இவர் லண்டன் ஐ. டி. பி. எம். உறுப்பினராவதற்கு தகுதி பெற்றுள்ளார். யாழ் திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலையின் பழைய மாணவியான இவர் யாழ் ஓட்டோ கூல் என்ஜியரிங்கில் ஐ. டி. எம் பி உறுப்பினரான திரு யோகராசாவின் மேற்பார்வையில்' செய்முறை பயிற்சிகளை பெற்ருர். (க)

### அமெரிக்க இராணுவ மேஜர்

# சோவியத் வீரரால் கொல்லப்பட்டார்!

பேர்லின், மார்ச் 26

அமெரிக்க மேஜர் ஒருவர் சோவியத் இராணுவ வீரர் ஒருவரால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் கிழக்கு ஜெர்மனியில் இடம் பெற்றது. அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஆர்த்தர் டி. நிக்கொல்பென் என்பவரே கொலையுண்டவராவார்.

இவர் கிழக்கு ஜெர்மனியிலுள்ள அமெரிக்க இராணுவக்குழுவில் சேவையாற்றிவந்தார். இங்குள்ள எல்லைப் பகுதி நகரொன்றில் வைத்தே இச்சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்துக்கான காரணமெதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. சோவியத் அமெரிக்க இராணுவ ராஜதந்திரவட்டாரங்களிலும் இது குறித்து மௌனம் சாதிக்கப்படுகிறது. (கி)

### கடத்தப்பட்ட வர்த்தகர்களின் அனுபவம்

# இறைச்சி மீனுடன் சாப்பாடு!

## உடைகளையும் தோய்த்துத்தந்தார்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் கடத்தப்பட்ட 3 வர்த்தகர்களும் 10 நாட்களும் இரு வீடுகளில் வைத்து கடத்தியவர்களினுல் நல்ல முறையில்கவனிக்கப்பட்டதாகவும், அவர்கள் விரும்பிய சாப்பாடு வழங்கப்பட்டதாகவும், தினமும் படிப்பதற்கு பத்திரிகைகள் வழங்கப்பட்டதாகவும் விடுதலையான வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

யாழ். பலசரக்குக் கடை உரிமையாளர் வி. கே. கனகரத்தினத்தின் மகன் கனகசுந்தரமும் கணேசன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கே. எஸ். கனகசபை, சண்முகானந்தாஸ் உரிமையாளர் இ. குமாரசிங்கமும் இனந்தெரியாதவர்களினுல் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டு 10 நாட்களின் பின் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இம்மூவரும் ஒரே வீட்டில் வைக்கப்பட்டிருந்ததாகவும், ஒருவாரத்தின் பின் வேறு வீட்டிற்கு மாற்றப்பட்டு விடுதலையாகும்வரை அங்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

தினமும் நண்பகல் இறைச்சி அல்லது மீனுடன் சாப்பாடு வழங்கப்பட்டதாகவும், காலையில் இடியப்பம் அல்லது பாணும், இரவு பிட்டும் வழங்கப்பட்டதாகவும், ஒருநாள் மரை இறைச்சியுடன் சாப்பாடும், வேறொரு நாள் முயல் இறைச்சியுடன் சாப்பாடும் வழங்கப்பட்டதாகவும், இவை தவிர ஆடு, மாடு, கோழி இறைச்சிகளுடனும் மீனுடனும் சாப்பாடு வழங்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

### ஒரே இடத்தில் மூவரும்

இருவர் ஒரு அறையிலும் மற்றவர் வேறு ஒரு அறையிலும் முதலில் வி_ப_ட்டதாகவும், ஒருவாரத்தின் பின் வேறு வீட்டிற்கு மாற்றியபோது எல்லோரும் ஒரேஇடத்தில் விடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

குளிப்பதற்கு அவர்கள் தங்கியிருந்த அறைக்குள்ளேயே தொட்டியொன்றில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்ததாகவும், மாற்று உடையாக சாரமும், துவாயும் வழங்கப்பட்டதாகவும், இம்மூவரும் அணிந்து சென்ற உடைகளைக் கடத்தியவர்களே தோய்த்துக்கொடுத்ததாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

கடத்திச்சென்றபோதும், பின் விடுதலை செய்தபோதும், மூவரின் கண்களைக் கட்டியே கூட்டிச்சென்ருர்கள் என்றும், முழுகுவதற்கு ஒருநாள் 'சம்பூ' வழங்கப்பட்டதென்றும் தினமும் குளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கடத்தியவர்களுடன் 15பேர்களுக்கு மேல் அங்கு இருந்ததாகவும் எல்லோரும் அன்போடும், பணிவோடும் கடத்தப்பட்டவர்களுடன் பழகினுர்களென்றும் தெரிகிறது.

படுப்பதற்கு பாய், தலையணை வழங்கப்பட்டதாகவும், பகலிலும் அறைக்குள்ளே இருக்கவேண்டியிருந்ததாகவும் கடந்தஞாயிறு இரவு 9மணிக்கு விடுதலை செய்யப்போவதாகத் தெரிவித்தபோது தாங்கள் மகிழ்ச்சியடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மூன்ருவது தினம் வர்த்தகர் ஒருவருக்கு சுகவீனம் ஏற்பட்டபோது அவர் நன்கு பராமரிக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மலகூடத்திற்கு கண்களைக் கட்டியே கூட்டிச்செல்லப்பட்டார்கள்என்றும் வர்த்தகர்கள் ஒருவருடன் ஒருவர் கதைக்கச் சந்தர்ப்பம் இல்லை என்றும் தெரிவித்தன .

### யன்னல்கள் பூட்டியிருந்தன

அறை யன்னல்கள் எந்நேர

(5ம் பக்கம் பார்க்க)

# பாக்கு நீரிணையில் இரவுநேர ரோந்து வேண்டும்!

## இராமேஸ்வரம் மீனவர் வேண்டுகோள்

(சென்னை)

''இந்தியக் கரையோரக்காவல்படையினர் பாக்குநீரிணைப் பகுதியில் இரவு நேரத்திலும் ரோந்துபுரியவேண்டும்'' என்று வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசிடம் ராமேஸ்வரம் மீனவர்கள் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது: இரவு நேரத்தில்தான் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்கள் நிகழ்கின்றன.

எனவே இந்நேரத்திலேயே இராமேஸ்வரப்பகுதி மீனவர்களுக்கு பாக்குநீரிணைக் கடல் பகுதியில் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# புளியம்பொக்கணை ஆலய பொங்கல் உற்சவம்

(கிளிநொச்சி)

வடபகுதியில் பிரசித்தி பெற்றதும் வன்னிப்பிரதேசத்தில் வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் அடுத்த மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை வழமை போல் நடைபெற ஆலய பரிபாலனசபையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இவ்உற்சவத்தை முன்னிட்டு கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவனியா, மன்னர், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து பெரும் தொகையான அடியார்கள் வருகைதரவுள்ளதால் பிரஸ்தாப இடங்களில் இருந்து இ. போ. ச வினர் விசேட பஸ் சேவையும் நடத்தவுள்ளனர்.

ஆலயப் பொங்கலை முன்னிட்டு ஊரடங்குச் சட்டத்தை வடபகுதியில் தளர்த்துமாறு ஆலய பரிபாலன சபையினர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689



PAPER CLASS

பிரிவு I

ஆரம்பம்: 30-03-1985

சனிக்கிழமை காலை 7-30 மணி

7-30 — 8-30 பௌதிகவியல் — Mr. VARNAM

8-30 — 9-30 இரசாயனவியல் — Mr. THILLAINATHAN

9-30 — 10-30 தாவரவியல் — Mr. KUGATHARAN

10-30 — 11-30 விலங்கியல் — Mr. NAGANATHAN

பிரிவு II

விரைவில் ஆரம்பமாகின்றது.

11-30 — 12-30 — பௌதிகவியல்

12-30 — 1-30 — இரசாயனவியல்

1-30 — 2-30 — தாவரவியல்

2-30 — 3-30 — விலங்கியல்

விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE

B M C LANE, JAFFNA.

## சுடப்பட்டுமரணம்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளையின் எழுதுவினைஞராகப் பணியாற்றும திரு. சோ. ஜெயச்சந்திரன் நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் வைத்து சுடப்பட்டுமரணமானுர்.

கண்காணிப்பு வலயத்தினுள் பிரவேசித்தபோதே இவர் சுடப்பட்டதாகக் கூறப்படுகிறது. சடலம் மந்திகை மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்ட

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மும் பூட்டப்பட்டிருந்ததாகவும், வாசல் கதவுகள் பூட்டப்பட்டிருந்ததாகவும், வெளியில் அவர்கள் நடமாட்டம் எந்நேரமும் இருந்ததாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ஒருநாள் அப்பம் காலைச் சாப்பாடாகத் தரப்பட்டதாகவும். எலுமிச்சம்பழ ரசமும் ஒருநாள் வழங்கப்பட்டதாகவும். பாணுடன் டின்மீன்கறி ஒருநாள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

எவ்வித பாதிப்புமில்லாமல் தங்களைப் பராமரித்து விடுதலை செய்தவர்களுக்கும், தங்களின் விடுதலைக்காக முயற்சி எடுத்த சகலருக்கும், குறிப்பாக யாழ்ப்பாண வர்த்தகர் சங்கத்தினருக்கும் விடுதலையானவர்கள் நன்றியைத் தெரிவித்தனர்.


இன்று மட்டும்

ரீகல்

தினசரி 10-30, 2-30

JUNGLE WARRIORS

ரீகல் மினி

தினசரி 10-15, 2-00

விஜயகாந், விஜி நடித்த

பி. எஸ். வீரப்பாவின்

வெற்றி

மனோகரா

இன்றுமுதல்

ரி. ராஜேந்தர், சிவகுமார், நளினி நடித்த

தங்கைக்கோர் கீதம்

(கலர்)

ஆனந்தி வீடியோ சினிமா

(மனோகராவில்)

10-30, 2-30

சிவாஜி-பிரபு-ராதா

'இரு மேதைகள்'

லிடோ சினிமா

10-30 am, 2-00 pm, 4-00 pm

"Still of the Night"

Adults Only

வெலிங்டன்

(யாழ். நகர்)

10-30, 2.30

சிவாஜி, கே. ஆர். விஜயா, பிரபு நடித்த

நீதிபதி

(கலர்)

WINDSOR

Daily 10-30, 2-00, 4-15

விருதுபெற்ற நடிகர்கள் ஜெஸிக்கா லாங்கே, ஜாக் நிக்கல்ஸன் நடித்த

THE POST MAN ALWAYS RINGS TWICE

கடைசிச் சில தினங்கள் மட்டும்

யாழ். வின்சர் மினி

தினசரி 10-30, 2-00

சிரஞ்சீவி, சுஹாசினி சில்க் சுமிதா நடித்த

"சேலன்ஞ்"

பயங்கரச் சண்டைகள், கவர்ச்சி நடனங்கள் நிறைந்த சித்திரம்


## தனியார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யினை அடைந்துள்ளதனை அனைவரும் அறிவர்.

சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது பயணிகளை இறக்கிவிட்டு வாகனம் கடத்தப்படுவதையும் சாரதிகள் தாக்கப்பட்டு வாகனம் கடத்தப்படுவதையும், தம்மை இனங்காட்டாது வாகனங்களை ஆயுத முனையில் பலவந்தமாகப்பறித்து தேவை முடிந்த பின் அநாதரவாக விட்டுச்செல்வதையும், எரிபொருட்கள் பறிக்கப்படுவதையும் தடுக்கவும், தவிர்க்கவும் கோருகிறோம்

## மாணவர்

[3ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூரில் ரூபா நோட்டுக்களை அச்சிடுவதற்கான ஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட இருப்பது குறித்தும் சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அத்தனகலை எம். பி.யும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவருமான லக்ஷ்மன்ஜெயக்கொடி இது குறித்து அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

உள்ளூரில் கரன்ஸி நோட்டுகளை அச்சிடுவதற்கான ஸ்தாபனம் ஒன்று விசால கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதியில் அமையப்போகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது இப்படியான ஒரு ஸ்தாபனம் அங்கே அமைக்கப்படுவதற்குப் பதில் மிகவும் பாதுகாப்பான இடத்திலேயே அமைக்கப்படவேண்டும். பியகமவுக்கு அருகே சபுகஸ்கந்த எண்ணெய்சுத்திகரிப்புஆலைக்கு எண்ணெய் கொண்டுசெல்லப்படும் குழாய்களுக்கு என்ன நடந்தது தெரியும்தானே?என்பது அவரது அபாய எச்சரிக்கை.

'பிராட்பரி வில்கின்சன்' என்ற ஸ்தாபனம் 1947ம் ஆண்டு தொட்டு எமக்கு ரூபா நோட்டுக்களை அச்சிட்டுத் தருகிறது 1972ம் ஆண்டில் ரூபா நோட்டுக்களின் பெறுமதி ரத்துக் செய்யப்பட்ட சமயத்தில் மாத்திரம் வேறொரு ஸ்தாபனத்தில் ரூபா நோட்டுக்கள் அச்சிடப்பட்டன. இந்த ஸ்தாபனம் 115 நாடுகளுக்கு ரூபா நோட்டுக்களை அச்சிட்டுக்கொடுக்கிறது

இந்த ஸ்தாபனத்தின்மூலம் ஆரம்பத்தில் 100 இலங்கையருக்கு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். எமக்குத் தேவையான நோட்டுக்களை மாத்திரமல்லாமல் ஆசிய, ஆபிரிக்க மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தேவையான ரூபா நோட்டுக்களையும், பாஸ்போர்ட்டுக்களையும் மற்றும் பாதுகாப்பு ஆவணங்களையும் இந்த ஸ்தாபனத்தின்மூலம்அச்சிடத் தீர்மானித்திருக்கிறோம். இதன்மூலம்நாம் வெளிநாட்டு சம்பாத்தியத்தையும் பெறமுடியும். இது ஒரு கூட்டு முயற்சியாகும். அரசாங்கம் 40 சதவீதமான பங்கையும், பிராட்பரி வில்கின்ஸன் ஸ்தாபனத்தின் 60 சதவீதமான பங்கையும் மூலதனமாகக்கொண்டிருக்கும். நிதி திட்டமிடல் அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுள் ஒருவரான டாக்டர் இந்திரஜித் குமாரசுவாமி இந்த ஸ்தாபனத்தின் ஒரு இயக்குநராக இருப்பார் என்று விளக்கமளித்தார்.

மேற்படி ஸ்தாபனம்குறித்து நிதி அமைச்சர் சபைக்கு அளித்த விளக்கமே இது

அண்மையில் காலஞ்சென்ற ரஷ்ய ஜனதிபதி கொன்ஸ்ரன்ரின் செர்னென்கோவுக்கு அனுதாபப் பிரேரணை ஒன்றும் சபையில் நிறைவேற்றப்பட்டது

பிரதமர் பிரேமா பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசினர். வெளிநாட்டமைச்சர் ஹமீத், எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, கலவானை சரத், மஹரகமத் தொகுதி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் இந்தப் பிரேரணைமீது பேசினர்கள்.

## தட்சர் விஜயத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முனையாகவும் அமையலாம் என்றார் திரு. தொண்டமான். உயர்மட்டப் பேச்சுக்களின் போது அவசியம் ஏற்பட்டால் தாமும் கலந்து கொள்வார் என்றும் மன்னார் தலைமன்னார்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றியும், இந்திய வம்சாவளியினர் பிரச்னைகுறித்தும் தாம் திரு. பண்டாரிக்கு விளக்கியதாக அமைச்சர் தெரிவித்தார்.

### பிரதமர் மற்றும் அமைச்சர்களை சந்தித்தார்

பிரதம மந்திரி திரு. பிரேமதாசா, உள்துறை மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் திரு தேவநாயகம். தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு: லலித் அத்துலத்முதலி ஆகியோருடன் நேற்று திரு. ரமேஷ் பண்டாரி தனித்தனியே சந்தித்துப் பேசினர்.

பாரத ஹைக்கமிஷனர் திரு சத்வாலும், வெளியுறவு அமைச்சுக் கூட்டுறவுச் செயலர் திரு. தேவாரியும் இப்பேச்சுக்களில் திரு. பண்டாரிக்கு உதவியாக இருந்தார்கள்.

பாரதத்திற்கான இலங்கைத் தூதுவர் திரு. திலகரத்தினவும் இலங்கைத் தரப்பில் சமூகமளித்திருந்தனர்.

இன்று மாலை பாரதம் புறப்படுமுன் திரு ரமேஸ் பண்டாரி திரு. ஜயவர்த்தனவுடன் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

திரு. பண்டாரி நாடுதிரும்பு முன் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்க, எதிர்கட்சித் தலைவர் திரு அனுராபண்டாரநாயக்க ஆகியவர்களையும் சந்தித்துப்பேசவிருக்கிறார்.

## சிறில்மத்யூ

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

ளதாகவும் ஒரு போடுபோட்டார்

### மதவாச்சிவரை எல்லை வந்துவிட்டது

எமது எல்லைகளை நாம் பாதுகாக்காவிடின் எல்லைகள் எம்மை நோக்கிவந்துவிடும் என ஜனதிபதி கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சம்பிரதாயபூர்வ அமர்வின்போது குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டியலக்ஷ்மன் ஜயக்கொடி இது வரை கடலாக இருந்த எமது எல்லை இன்று மதவாச்சி வரை வந்து விட்டது என்று கூறிய போது அரசதரப்பில் சிறு குறுக்கீடுகளும் சலசலப்பும் ஏற்பட்டன.

அண்மையில் இலங்கையின் ஹெலிகாப்டர் ஒன்று கடலில் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதாகக் கூறப்படுவது உண்மை இல்லையா? என அவர் கேள்வி எழுப்பிய போது அரசுக்கு கிடைத்த ஆதாரங்களின்படி விமானம் சுட்டு வீழ்த்தப்படவில்லை என்றும் அதற்கு சிறு சேதமே ஏற்பட்டது என்றும் சுகாதார அமைச்சர் பதில் அளித்தார் அந்த பதிலுடன் திருப்திப் படாத ஜயக்கொடி, சுகாதார அமைச்சின் கூற்று நூற்றுக்கு நூறு உண்மையா என்றும் ஒருதடவைக்கு இருதடவை கேட்டார் இதில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்றும் அவர் கேள்வி எழுப்பினர்

அமைச்சர் தொண்டாவின் போக்கு குறித்து சகல எதிர்க்கட்சியினருமே விமர்சிக்கத் தவறவில்லை

''தாம் ஐ தே. க அமைச்சரவையிலிருந்து கொண்டு ஜனதிபதியின் கையைப் பலப்படுத்த வேண்டும். அதை விடுத்து அங்கிருந்து வெளியேறினல் சிறில மத்யூவின் கை பலமடைந்து சிறுபான்மையினருக்கு ஆபத்தாக முடிந்து விடும்'' —

(மிகுதி நாளை வரும்)

## இலங்கைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது. இந்நிலைமை தற்செயலாக உருவாகியுள்ளதா அல்லது செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதா என்பதுபற்றி அவதானிகளால் எதுவித முடிவுக்கும் வரமுடியவில்லை.

இலங்கை ஜனதிபதி ஏற்கனவே அறிவித்துள்ள மாவட்ட, மாகாணசபைகளுக்கு மேலாக ஏதாகிலும் உருப்படியான யோசனைகள் உருவாகும் பட்சத்திலேயே இப்போதைய நிலைமையில் மாற்றம் ஏற்படமுடியும் என அவர்கள் கருதுகிறார்கள்.

### தி. மு. க மறியல்

இதேவேளை வரும் ஏப்ரல் 29ம் திகதி முதல் இந்திய அரசு அலுவலகங்கள், தமிழ் நாட்டிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் ஆகியவற்றின் முன் தினமும் மறியல் போராட்டங்களை நடத்தி இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்திய அரசு தீவிரமாகச்செயல்பட்டு தீர்வு காணும்படி வற்புறுத்துவதென தமிழ்நாடு தி.மு கழகம் தீர்மானித்துள்ளது.

உலகத்தமிழ் இளைஞர்பேரவை மார்ச் 27ம் திகதி புதுடில்லியில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

## திருநெல்வேலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''விசாரணைகள் தமிழ்மக்களாலேயே நடைமுறைப்படுத்தப்படவேண்டும் தமிழ் நாட்டுத்தலைவர்களால் அல்ல'' என்றவாறு சுலோக அட்டைகளில் கூறப்பட்டிருந்தது.

நேற்றுப்பிற்பகல் 5 மணியுடன் உண்ணுவிரதம் முடிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (மா)

## இவர்களுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுவந்தது தெரிந்ததே.

இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து ஒய்வூதியம் வழங்கப்படும் என்று சில தடவை அறிவிருந்த போதிலும் இறுதியாக கடந்த 27ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 3ம் திகதி வரை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று தபால் அலுவலக அதிகாரி ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில் மறு அறிவித்தல்வரை ஒய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்று சொன்னர். (மா)


### வாடகைக்கு

உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்க தொழில் நிலையம் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொழில் நடத்த விரும்புவோர் 6-4-85-க்கு முன் கடித மூலம் தொடர்புகொள்ளவும். ஆகக்குறைந்த வாடகை மாதம் ரூபா 75/- ஸ்தாபனங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

செயலாளர்

உரும்பிராய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம்.

2491

### HOME FINANCE LTD

ஹோம் பினுன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு, சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD, JAFFNA.


## 31-ம் நாள் நினைவஞ்சலி

யாழ். கொட்டடி அம்மன் வீதியைச் சேர்ந்த



**அமரர் துரைராஜா இலங்கேஸ்வரன்**

(பாபு)

(யாழ். - காங்கேசன் மினி பஸ் சாரதி)

மலர்வு: 26-10-1961

உதிர்வு: 25-02-1985

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடராய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், அன்புக்கு இலக்கணமாய் இருந்து; நினையாத நேரம் அணைந்த எம் ஒளிவிளக்கே! உம்மை நினைக்காத நேரமும் இல்லை எமக்கு. எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்ற பாசமிகு செல்வமே! எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்தி விட்டு திடீரென மீளாத் துயில் கொண்ட உங்களை எம்மால் மறக்கமுடியாது கலங்கி நிற்கின்றோம் நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றுவிட்டாலும் உள்ளத்தால் எம்மை விட்டுப் பிரியாது இருந்த உங்கள் பசுமையான நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாதய்யா!

உமது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கும்

தாய், தந்தை

அக்கா: விமலா, அத்தான்: செல்வம்,

தம்பிமார்: உதயசிறி, கோணேஸ்வரன், பிரேமன்,

தங்கைமார்: ஜெசிந்தா, பாமினி,

மருமக்கள்: கமிலா, கவின்சன், கவுசா, புரேஞ்சன்,

பேரன்,பேத்தி, சித்தப்பாமார் சித்திமார், மாமாமார், அத்தைமார், உற்ரூர், உறவினர், நண்பர்கள்.

2496 தகவல்: மைத்துனர் செல்வம்.

## ஆசிரிய நேர்முகப் பரீட்சை——————

# ஏப்ரலில் தோற்ற வேண்டியோர் விபரம்

(கொழும்பு)

சடந்தமார்கழி, தைமாதங்களில் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைகளில் தவிர்க்கமுடியாத காரணங்களினுல் சுமார் 175 பேர் தோற்றமுடியாமல் போயுள்ளனர். இவர்களுக்கென ஏப்ரல் 2ம், 3ம் திகதிகளில் மீண்டும் ஒரு பரீட்சை நடைபெறவுள்ளது.

கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி க. ஜெயக்குமாரினுல் வெளியிடப்பட்டுள்ள அந்த 175 பேரின் பெயர்விபரங்கள் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

23, திரு ரி. பி. ரமேஷோ, நீர்வேலி வடக்கு, 24. திரு ப. ஸ்ரீரஞ்சன், திருநெல்வேலி வடக்கு 25 திரு அ சபால கிருஷ்ணன், சுழிபுரம், 26. திரு. எ. குமரேசமூர்த்தி. மே/ப வாரிவளவு, காரைநகர், 27, செல்வி வ. மல்லிகா, கரவெட்டி மேற்கு. 28. திரு ஆர் ராஜேந்திரா, கரவெட்டி கிழக்கு

29. திரு என் ராம்குமார், 'வேலகம்' வேலணை மேற்கு, 30. திரு எ. சிவகுமார், வசாவிளான், 31. திரு. ச. சத்தியசீலன், நாரந்தனை வடக்கு, 32 திரு. த தேவராஜா, மயிலிட்டி தெற்கு. திரு வை. கிருபைநாதன், மட்டுவில் வடக்கு.

யாழ் மாவட்டம் (ஆங்கிலம்)

34. திருமதி த. தியாகராஜா, நெடுந்திவு, 35. திரு. எ. பிறிட்டோ, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம். 36. திரு. ச. செந்தில்குமார் வட்டுக்கோட்டை மேற்கு, 37. செல்வி வ. சுபோஷினி, 251, ஆனைப்பந்தி. 38. திரு ம சேவியர் தனிநாயகம், நெடுந்தீவு, 39. திருமதி ந குணசீலி, இளவாலை-40. திரு ரி. சோமதர்மபாலன் அல்வாய் வடக்கு. 41 செல்வி வ. செல்லத்துரை, 12, வண்ணார்பண்ணை.

(தொடரும்)

## மரண அறிவித்தல்

### சைவவைத்தியநாதர் ஐயம்பெருமாள்

அனலைதீவைச் சேர்ந்த சைவ வைத்தியநாதர் ஐயம்பெருமாள் - ஓய்வுபெற்ற மலாயன் உத்தியோகஸ்தர், அனலைதிவு கி மு. சங்க முன்னைநாள் தலைவர், அனலைதீவு சதாசிவ ஆங்கில மகாவித்தியாலய முன்னைநாள் முகாமையாளர், அனலைதீவு கூட்டுறவுச் சங்க முன்னைநாள் தலைவர், அனலைதீவு உதவி உபதபால் அதிபர் - தமது 90வது வயதில் 26-3-1985ல் காலமானார். அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் திருமதி நாகரத்தினம் (சிங்கப்பூர்), திரு. நடராஜா (மூளாய் உபதபாலதிபரும் அ இ தமிழ்பேசும் உபதபாலதிபர்கள் சங்கத் தலைவரும்), திரு பொன்னம்பலம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற, திருமதி பூரணதேவி, திருமதி விமலாதேவி, திருமதி பத்மாதேவி (ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மலேஷியா குளுவாங் தபால் பகுதி பிரதம அத்தியட்சகர் காலஞ்சென்ற திரு. சணபதிப்பிள்ளை, திருமதி மஞேன்மணி (காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவர்), திருமதி புனிதவதி (சிங்கப்பூர்), திரு. சரவணமுத்து (மலேஷியா), திரு. துரைராஜா (சுகாதாரப் பரிசோதகர் ஊர்காவற்றுறை), திரு. செல்வரத்தினம் (உதவித் தபாலதிபர் கொக்குவில) ஆகியோரின் அன்பு மாமனுரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள 28-3-1985 வியாழக்கிழமை 138, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் அன்னாரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக காலை 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வி. செல்வரத்தினம்,

(2512) 58. பிரவுண் விதி - யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரிலியட் விஜயரட்ணாம்



இவர் திரு. G. விஜயரட்ணத்தின் மனைவியும் [பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்க மின்தறி ஆலை], அலோசியஸ் அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும் A. G. றிச்சாட் (துறைமுக அதிகார சபை), A. றெஜினேல்ட் (ஜெர்மனி), A. பயஸ் ஹரியட் (ஜெர்மனி), A. குமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், A. G றிச்சாட் சகோதரர் திருமதி றெஜினு மருமகள் தம்பா, G ஜெயரட்ணம் (அரசமரக் கூட்டுஸ்தாபனம்), G அரசரட்ணம (ராசாஸ்ரோர்ஸ்), G குணரட்ணம் (வட்டக்கச்சி, G. பாலரட்ணம் (ஜெர்மனி), G. துரைரட்ணம் (ஜெர்மனி), G. பாலரட்ணம் ஜெர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற M கபிரியேற்பிள்ளை அன்னம்மாவின் அன்பு மருமகளும், விஞேஜ் விஜயகுமார், ஸ்கார்மிலா சுகிர்தினி, சிந்தியா சுபோதினி, அனிட்டா சுஃன்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆகிய திருமதி ரிலியட் ஜெயரட்ணம் காலமானார்.

இறுதிக் கிரியை சென். அன்ரனிஸ் லேன் பண்டத்தரிப்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 27-3-85 அன்று காலை 9-00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

2509 G. விஜயரட்ணம்.

## மின் கம்ப ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும், இறந்தவர் தமது மூன்ருவது மகன் என்றும், அவர் திருட்டுக்குற்றத்திற்காக2மாத சிறைத்தண்டனை பெற்று 7 மாதத்திற்கு முன்புதான் சிறையிலிருந்து திரும்பிவந்தாரென்றும் தெரிவித்தார்; இம்மாதம் 20ம் தேதி காலை யாழ் நகர் சென்றவர் திரும்பிவரவில்லை என்றும், 25ம திகதி மின்கம்பத்தில் சடலம் கட்டப்பட்டிருப்பதாக அறிந்து சென்று பார்த்ததாகவும் யாரால் சுடப்பட்டதென்று தெரியாதென்றும் தகனக்கிரியை செய்ய சடலத்தை ஒப்படைக்குமாறும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை தாயாரிடம ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு, விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

சோமசுந்தரம் கனகராசாவின் (23 வயது) சடலத்தை அவரது மனைவி நாகேஸ்வரி அடையாளம் காட்டினுர்.

அவர் சாட்சியமளிக்கையில் இரண்டு வருடங்களுக்கு முன் திருமணம் செய்ததாகவும், ஒரு குழந்தை இருப்பதாகவும் தெரிவித்தார்

திருட்டுக் குற்றத்திற்காக சிறை சென்ருர் என்றும்; 3 மாதத்திற்கு முன் சிறையிலிருந்து திரும்பி வந்தாரென்றும், கடந்த 2 மாதமாக தன்னுடன் இருந்தாரென்றும் கூறினுர்.

பிரேத பரிசோதனையின்பின் சடலத்தை மனைவியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

காரைநகரைச்சேர்ந்த இரத்தினம் நடராசவின் (26 வயது) சடலத்தை அவரது தாயார் தங்கம்மா அடையாளம் காட்டினுர்.

தாயார் சாட்சியமளிக்கையில், தாங்கள் சாவகச்சேரி கவுண்டாவில் ஒழுங்கையில் வசிப்பதாகவும், இறந்த தமது மகன் காரைநகரில் அரியமலர் என்பவரை திருமணம் செய்திருந்தாரென்றும், அவர்களுக்கு 3 குழந்தைகள் உண்டென்றும், தற்போது அரியமலர் 7 மாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தனதுமகன் திருட்டுக்குற்றத்திற்காக இரண்டு தடவை சிறைத்தண்டனை பெற்றிருந்தாரென்றும், 84 ஜூலை மாதம்தான் சிறையிலிருந்து வந்தாரென்றும் கூறினுர். சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனை பின் தாயாரிடம் ஒப்படைக்குமாறும், மனைவியின் ஊரான காரைநகரில் சடலம் தகனம் செய்யப்படவேண்டும் என உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## கடத்தியிருந்தால் தெரிவிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஃசானகதெருவைச் சேர்ந்த பி. ஏ. கரீம் (48 வயது) என்பவரை காணவில்லை என்று இஸ்லாமியமக்கள் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 7ம் திகதி புத்திசுவாதீனமற்றவராகஇருந்தஇவரை சந்தேகத்தின்பேரில் யாரும் அழைத்துச்சென்றிருந்தால் மேற்படிபாதுகாப்பு அமைப்புடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (மா)

## 'முதுகலைமாணி' பட்டம்பெற்ருர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகம் திரு. கிருஷ்ணபிள்ளை ஆறுமுகத்துக்கு 'முதுகலைமாணி'ப் பட்டம் வழங்கியுள்ளது.

'யாழ்ப்பாண நகரமும், அதன் விளிம்பு மாற்றங்களும்' என்ற இவரது ஆய்வுக்கே இப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் டபிள்யூ. எல். ஜெயசிங்கம் ஆகியோரின் மேற்பார்வையில் இவ்வாய்வை மேற்கொண்டிருந்தார்.

## மரண அறிவித்தல்

### சகோதரி டேய்சி பக்கஸ்

[இலங்கை பெந்தெகொஸ்தே சபை]

சகோதரி டேய்சி பக்கஸ் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார். அடக்க ஆராதனை நாளை [28-3-85] வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு 111, கண்டிவீதி, சுண்டுக்குளியிலுள்ள இலங்கை பெந்தேகொஸ்தே சபை சாலையில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக கொட்டடி பெந்தேகொஸ்தே சபை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை விசுவாசிகள், உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

A. Mahendren 2504

## மரண அறிவித்தல்

### செல்லப்பா முத்துக்குமாரு

வண். ஐயனுர் கோயில்வீதியைச் சேர்ந்த செல்லப்பா முத்துக்குமாரு (இளைப்பாறிய உணவுப் பரிசோதகர்- கொழும்பு மாநகரசபை) 23-3-85 சனி கிழமையன்று காலமானுர் அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை (28-3-85) காலை 9-30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல 90- ஐயனுர் கோவில் வீதி யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் உற்ருர். உறவினர். நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்

2488

அறிவித்தல் - மனைவி.

## மரண அறிவித்தல்

### திருமதி. பெயித் (FAITH) இராசமல்லிகை காராளகுலசிங்கம்

இவர் இயேசுக்கிறிஸ்துவுக்குள் மரித்துவிட்டார். இவர் காலம்சென்ற திரு T A. காராளகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்; கருணி, கீர்த்தி, பாக்ய, சந்திரா, ராஜா (U. S. A) வோ (நைஜீரியா), தங்கராணி (U. K) நிமலதேவி, ஆகியோரின் அருமைத் தாயாரும்; காஞ்சி (நைஜீரியா) பீஸ் (Pease) U. S A அலம் (U.K) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் மரண ஆராதனை 28-3-85 வியாழக்கிழமை 82. 4ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் காலை 8 00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர் உறவினர், நண்பர்கள்யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்போடு கேட்கப்படுகின்றனர்.

2510 கருணி காராளகுலசிங்கம்

## மரண அறிவித்தல்

### க. பரராசசிங்கம்

கஸ்தூரியார் வளவு வைத்திய சிரோன்மணி க. பரராசசிங்கம் அவர்கள் காலமானுர். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், யோகீஸ்வரி, இரகுநாதன் (வீரகேசரி எஜண்ட் திருகோணமலை), கமலாசனி, யோகநாதன் Walker's and Sons Ltd Colombo), சிவகுமாரன் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற தபால் அதிபர் குணசிங்கம், சிவநாதன் (இலங்கை மின்சாரசபை அனுராதபுரம்), கிருஷ்ணராணி ஆகியோரின் அன்பு மாமனுரும், வத்சலா, ராஜ்மோகன் (Walkars and Sons Ltd Colombo), கௌசலா (யாழ். பல்கலைக்கழகம்), சியாமளா, பத்மஜா, சுகந்தினி, சிவகுகன், கோபிகா, சாம்பவி, மயூரன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தனக்கிரியைகளுக்காக [வியாழக்கிழமை 28-3-85] முற்பகல் 10-00 மணியளவில் 93/21, இந்துமகளிர் ஒழுங்கை கந்தர்மடம் இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

2511 இ. பொன்னம்பலவாணர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka unde Eeelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.